# தாராளக் கல்விக்கு இந்தி அவசியமில்லை.

## எதிர்ப்பாளர் போர் தொடுக்கத் துணிந்ததேன்?

### வங்காளிகளும் எதிர்க்கவில்லையா?

### காங்கரஸ் மந்திரிகள் மனோபாவம் என்ன?

### மூடு மந்திரம் எதற்கு?

### ஸர். கே. வி. ரெட்டி நாயுடு சாட்டை

சென்னை முதன் மந்திரியாரின் இந்தி கட்டாயபாடத்தைக் கண்டித்து ஸர். கே. வி. ரெட்டி நாயுடு அவர்கள் எழுதுவதாவது:-

காங்கரஸ்காரர் பதவியேற்று ஒரு மாதம் முடியுமுன்னே சென்னை மாகாணப்பள்ளிக்கூடங்களில் இந்தியைக் கட்டாய பாடமாக்கப்போவதாக முதன் மந்திரியார் தெரிவித்தார்.

உடனே அதைப் பலர் கண்டிக்கத் தொடங்கினார்கள்.

ஆகவே 1937 ஏப்ரல் 13ந் தேதி சென்னை மாகாணக் கல்லூரி ஐக்கிய சங்க ஆதரவில் கூடிய ஒரு பொதுக்கூட்டத்தில் கட்டாய இந்தியை ஆதரித்து கனம் ஆச்சாரியார் பேசும்படி நேர்ந்தது.

அப்பால் 1937 ஆகஸ்டு 15-ந் தேதி முத்தியாலு பேட்டை ஹைஸ்கூல் ஆந்திர பாஷாபிவிர்த்தி சங்கச் சார்பில் கூடிய ஒரு கூட்டத்தில் நான் கனம் ஆச்சாரியாரின் இந்தி கட்டாயபாடத்தை எதிர்த்துப் பேசினேன்.

மற்றும் பல பிரபலஸ்தர்கள் கண்டிக்க முன் வந்தார்கள்.

அவர்களுள் முக்கியஸ்தர் தோழர் சோமசுந்தர பாரதியார். அவரும் ஒரு காங்கரஸ்காரரே. அவர் கனம் முதன் மந்திரிக்கு பகிரங்கக் கடிதமும் எழுதினார்.

1937 ஆகஸ்டு மாத வாக்கில் திருச்சி, தஞ்சாவூர், சேலம் முதலிய இடங்களில் கூடிய பொதுக்கூட்டங்களிலும் இந்தி கட்டாய பாடத் திட்டம் கண்டிக்கப்பட்டது.

இந்தியை கட்டாய பாடமாக்கினால் முஸ்லிம்கள் காங்கரசிலிருந்து விலகி விடுவார்கள் என சென்னை அஞ்சுமனே இ.ஹசேனி சங்கம் போன்ற பொது ஸ்தாபனங்களும் எச்சரிக்கை செய்தன.

மாகாணம் முழுதும் சுற்றுப் பிரயாணம் செய்த மந்திரிகளும் இந்தி எதிர்ப்பின் வன்மையை உணர்ந்து கொண்டார்கள்.

#### காங்கரஸ்காரர் எதிர்ப்பு.

தியாகராயர் இந்திப்பிரசார சபைச் சதுக்கத்தில் கிருஷ்ணன் பண்டாலை இந்திப் பிரசாரகர் பயிற்சிப் பள்ளிக்கூடத்துக்கு அஸ்திவாரக் கல் நாட்டக்கூடிய கூட்டத்தில் காங்கரஸ்காரரே இந்தி கட்டாய பாடத்தைக் கண்டித்து முதன் மந்திரியாரிடம் கேள்விகள் கேட்கத் தொடங்கினார்கள்.

எதிர் அபிப்பிராயங்களை கனம் முதன் மந்திரி அலக்ஷியம் செய்யவே 1938 பிப்ரவரியில் காஞ்சிவரத்தில் ஒரு இந்தி எதிர்ப்பாளர் மகாநாடு கூட்டப்பட்டது. அம்மகாநாட்டுக்கு நானே தலைமை வகித்தேன்.

அதைத் தொடர்ந்து அநேக இடங்களில் அநேக கண்டனக் கூட்டங்கள் நடைபெற்றன.

#### எதிர்ப்பாளர் துணிவு.

எதிரிகள் அபிப்பிராயம் மீண்டும் கட்டுப்பாடாக அலக்ஷியம் செய்யப்படவே எதிர்ப்பாளர்கள் கறுப்புக்கொடி பிடிக்கவும் மறியல் கிடக்கவும் உண்ணாநோன்பிருக்கவும் துணிவு கொண்டார்கள்.

எதிர்ப்புத் தோன்றி வெகு நாட்களுக்குப் பிறகு—இந்தி கட்டாய பாடத் திட்டம் அமுலுக்கு வந்த பிறகு—கனம் முதன் மந்திரியார் பத்திரிகை நிருபருக்குப் பேட்டியளிக்கவும் மறுநாள் ஒரு சர்க்கார் அறிக்கை வெளியிடவும் கருணை கூர்ந்து முன் வந்தார்.

ஜூன் 9ந் தேதி வெளிவந்த பேட்டி வாலாறும் 10ந் தேதி வெளிவந்த சர்க்கார் அறிக்கையும் மிகவும் வேடிக்கையாக இருக்கின்றன. எதிரிகள் ஆட்சேபணைகளுக்குத் திருப்தியளிக்கும் அம்சம் அவற்றுள் ஒன்று கூட இல்லை.

கட்டாய இந்தி பாடத் திட்டத்துக்கு ஆதாவாக அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ள காரணங்களை ஆராய்ந்து பார்ப்போம்.

#### கட்டாய இந்திக்கு காரணங்கள்

1. இந்தியால்தமிழ் அழியுமா அழியாதா என்பது முக்கிய பிரச்சினையல்ல; ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சர்க்காருக்கு மாகாணத்திலுள்ள சிறுவர்களுக்கு தாராளக் கல்வியளிக்க அதிகாரமுண்டா? இல்லையா? என்பதே முக்கியமான பிரச்சினை என் கனம் ஆச்சாரியார் கூறுகிறார்.

முதன் மந்திரியார் அபிப்பிராயப்படி இந்தியின்றி எந்தக் கல்வித் திட்டமும் தாராளப் போக்குடைய திட்டமாகாதாம்.

ஆகவே தாராளக் கல்வி என்பதற்கு கனம் முதன் மந்திரியார் என்ன பொருள் கொண்டிருக்கிறார் என்பதை அறிவது கஷ்டமாக இருக்கிறது.

தாராளக்கல்வி யென்பது இலக்கியக்கல்வியென்றே சாதாரணமாகப் பொருள் கொள்ளப்படுகிறது.

ஆல்டஸ் ஹக்ஸிலி என்ற கல்வி நிபுணர் கூறுவதைக் கவனிப்போம்.

"தற்காலக் கல்வி இலக்கியக் கல்வி—தொழிற்கல்வி என இரண்டு பெரும் பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

மக்களின் மனோ பாவத்தை விருத்திசெய்து அறிவை விசாலப் படுத்துவதே இலக்கியக் கல்வியின் முதல் நோக்கம்.

சரித்திரம, தர்க்கம், மனோதத்துவம், ரஸாயனம், உயிர் நூல் முதலிய விஷயங்களில் ஏகதேச அறிவைக்கொடுத்து மக்களை உயர்தர வாழ்வுக்கு லாயக்காக்குவது இரண்டாவது நோக்கம்.

பிரதிதின வாழ்வுக்குரிய தொழில் அறிவை விருத்திசெய்து ஜீவனத்துக்கு வழி வகுப்பது தொழிற் கல்வியின் நோக்கம்.

#### தாராளக் கல்விக்கு இந்தி அவசியமா?

கல்வி நிபுணர் ஆல்டஸ் ஹக்ஸிலியின் இந்த அபிப்பிராயங்களை ஆதாரமாக வைத்துக் கொண்டு பார்த்தால் தாராளக் கல்விக்கு இந்தி அவசியமில்லை என்பது விளங்கிவிடும்.

முதன் மந்திரியார் அபிப்பிராயத்துக்கு ஆதரவளிக்கும் எந்தக் கல்வி நிபுணரையும் நான் இதுவரைப் பார்த்ததே இல்லை.

2 சர்க்கார் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் தாராளக் கல்விக்கு இந்தி இன்றியமையாதது எனக் குறிப்பிடப்படவுமில்லை.

இந்திய தேசிய வாழ்வில் நமது மாகாணத்துக்கு அதன் அந்தஸ்துக்குரிய கண்ணியமான ஸ்தானம் பெறுவதற்கு இந்தி இன்றியமையாதது என்றே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையை வெளியிட்ட விளம்பர மந்திரியார் தாராளக் கல்விக்கு இந்தி அவசியமில்லை யெனவே நினைத்திருக்கிறார்போல் தோற்றுகிறது.

எனவே இந்தியைக் கட்டாய பாடமாக்குவதின் நோக்கம் அரசியல் சம்பந்தமானதே.

அப்படிப் பார்த்தாலும் கனம் ஆச்சாரியார் திட்டப்படியுள்ள சொற்ப இந்திப் படிப்பினால் இந்திய தேசிய வாழ்வில் சென்னை மாகாணத்தின் அந்தஸ்துக்குரிய ஸ்தானத்தை சென்னை மாகாணம் எப்படிப் பெற்றுவிடுமென்பது விளங்கவில்லை.

இந்த மாகாணத்திலே ஆயிரக் கணக்கான முஸ்லிம் சிறுவர்கள் உருது படித்திருக்கிறார்கள்.

அவர்களது உருது அறிவு இந்தியத் தேசிய வாழ்வில் அவர்களுக்குரிய ஸ்தானத்தை அளித்திருக்கிறதா!

#### மூடுமந்திரம் ஏன்

அது எப்படியானாலும் ஆகட்டும், இந்தி கட்டாயப் பாடத்துக்கு இதுவரை கூறப்பட்டு வந்த இரண்டு அரசியல் சார்பான காரணங்கள் சர்க்கார் அறிக்கையிலோ முதன் மந்திரியார் பேட்டிவரலாற்றிலோ விளக்கப்படவேயில்லை.

இந்திய ஐக்கியத்துக்கு ஒரு பொதுமொழி தேவையென்பதும் இந்திய பூரண சுயராஜ்யத்துக்கு ஒரு அகலஇந்திய பொதுமொழி இன்றியமையாதது என்பதுமே இதுவரை கூறப்பட்டுவந்த இரண்டு அரசியல் காரணங்கள்.

இந்தி வேண்டாமென்பவர்கள் இந்த இரண்டு காரணங்களையும் வன்மையாக எதிர்த்திருக்கிறார்கள்.

கானடா, தென்னாப்பிரிக்கா, ஸ்விட்சர்லாந்து நிலைமைகளை முன்னிறுத்திப் பார்த்தால் தேச விடுதலைக்கு ஒரு மொழி அவசியமில்லை யென்பதும் இந்திய நிலைமைக்கு ஒரு பொதுமொழி சாத்தியமானதல்ல வென்பதும் நன்குவிளங்கும்.

இந்த இரண்டு காரணங்களையும் அறிக்கையில் சர்க்கார் விளக்கிக் கூறாமலிருக்கக் காரணமென்ன?

தேச விடுதலைக்கும் தேசிய ஒற்றுமைக்கும் ஒரு பொது மொழி அவசியமில்லையென காங்கரஸ் சர்க்கார் ஒப்புக்கொண்டுவிட்டார்களா?

அப்படியானால் இந்தி எதிர்ப்பாளர் தமது கிளர்ச்சியின் வலிமையினால் காங்கரஸ்மந்திரிகளிடமிருந்து ஒரு சலுகை பெற்றுவிட்டார்கள் எனறே சொல்ல வேண்டும்.

#### காங்கரஸ் மனோபாவம் என்ன?

எனினும் சர்க்கார் அறிக்கையில் 'தேசிய வாழ்வு' என்ற சொற்றொடர் அடங்கியிருப்பதினால் காங்கரஸ் மந்திரிகளின் மனோபாவம் இன்னதென்று உணர முடியாமலே இருக்கிறது.

இருந்தாலும் சில காங்கரஸ் மந்திரிகளும், பார்லிமெண்டரி காரியதரிசிகளும் ஒரு பொது மொழிபற்றியும், ஒரு தேசிய மொழி பற்றியும் ஓயாமல் புலம்பிக்கொண்டே இருக்கிறார்கள்.

(3) மந்திரியின் பேட்டி வரலாற்றிலும் சர்க்கார் வெளியிட்ட அறிக்கையிலும் இந்தியாவில் அதிக மாகாணங்களில் பேசப்படும் பாஷை இந்துஸ்தானி எனக்குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஆனால் இதற்கு ஆதாரமில்லையென பல முறை மறுக்கப்பட்டிருக்கிறது; மறுப்பு தப்பென இதுவரை நிரூபிக்கப்படவுமில்லை.

கவிச் சக்கரவர்த்தி டாக்டர் ரவீந்திரநாத் தாகூரைப் போஷகராகக் கொண்ட கல்கத்தா 'ரவி பஜார்' இலக்கிய சங்கத்தார் அக்கூற்று பொய்யானதென நிரூபித்து இருக்கிறார்கள்.

'ரவி பஜார்' இலக்கிய சங்கம் பல பெரிய வங்கப் பண்டிதர்களை மெம்பராகக் கொண்டது.

#### வங்காளிகள் அபிப்பிராயம்.

இந்தியைப் பற்றி 'ரவி பஜார்' இலக்கிய சங்கத்தில் சமீபத்தில் விவாதம் நடந்தபோது ஆனந்த பஜார் பத்திராசிரியர்களிலொருவரான பிரபுல்ல சர்க்கார், வங்காளி 8 கோடி மக்களால் பேசப்படுகிறதென்றும் இந்தி 11 கோடி மக்களால் பேசப்படுவதாய்க் கூறப்படுவதற்கு ஆதாரமில்லையென்றும் கூறினார்.

இலக்கண இலக்கியங்கள் இல்லாத அநேக விருத்தியடையாத பாஷைகளையும் இந்தியுடன் சேர்த்து இந்தி பக்தர்கள் புளுகுச் செய்கிறார்களாம்.

இக்கச் சலுகை வங்காளிக்கு பிரயோகிக்கும் காட்டப்பட்டால் வங்காளி பேசுவோர் இந்தி பேசுவோரைவிட அதிகமாகவே இருப்பார்கள்.

இந்தியாவின் மிகுதியான பாகங்களில் இந்தி பேசுவோர் வசித்து வருவதாகக் கூறப்படுவது தப்பென்றும் ஆசாம், ஒரிஸா, பம்பாய், அஜ்மீர், மீர்வாரா, பலூசிஸ்தானம், சென்னை, பரோடா. கொச்சி, ஹைதராபாத், வடமேற்கு எல்லைப்புற மாகாணம், பாஞ்சாலம், காஷ்மீரம், மைசூர், ராஜபுதனம், கூர்ஜாம், திருவிதாங்கூர் முதலிய பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு இந்தி தாய் மொழியுமல்ல; உபமொழியுமல்ல எனவும் "விசித்ரா" பத்திரிகையின் ஆசிரியரான உபேந்திரநாத கங்குலி தக்க ஆதாரங்களுடன் விளக்கிக் கூறியிருக்கிறார்.

ஆகவே இந்தியை தேசியப் பொது மொழியாக்க இந்திய தேசிய காங்கரசும் இந்தி பேசும் வகுப்பாரும் முயற்சி செய்வதை "ரவிபஜார்" சங்கத்தார் எதிர்ப்பதும் இந்தி எதிர்ப்புக்கு இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் வசிக்கும் வங்காளி பேசும் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் ஆதரவளிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்வதும் ஆச்சரியமானதல்ல.

ஆகவே இந்தியே அதிகப்படியான இந்தியர்களால் பேசப்படும் பாஷை என்பது ஆதாரமற்ற பேச்செனத் தெளிவாகிவிட்டது.

(தொடரும்)

## புதிய ஆஸ்பத்திரி வார்டை ஸர். ஷண்முகம் திறந்து வைப்பார்.

எர்ணாகுளம், ஜூன் 2.)

பழையனூர் சர்க்கார் ஆஸ்பத்திரியில் கட்டப்பட்டிருக்கும் புதிய வார்டை 3-7-38ந் தேதி மாலை கொச்சி திவான் ஸர் ஆர். கெ. ஷண்முகம் செட்டியார் அவர்கள் திறந்து வைப்பார்.